# **DEPOSITION OF WITNESS**

## **(Chapter XXII Code of Criminal Procedure)**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.17 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | டாக்டர் எட்வின்ஜோ | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 17th day of December 2019.

முதல் விசாரணை

நான் மருத்துவக்கல்லூரி இயக்குனராக பணிபுரிந்து ஜூலை மாதம் 2019 ல் பணிமுதிர்வு ஓய்வு பெற்றுள்ளேன். நான் கடந்த 11.11.2009 ஆம் தேதி அன்று கோயமுத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசிரியராக பணிபுரிந்து வந்த போது அவினாசி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளின்படி பெயர், ஊர் தெரியாத சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யும்படியான வேண்டுகோளை அதே தினம் காலை 11.40 மணிக்கு கிரேடு 1 காவலர் எண்.1502 திரு.ஏசுநேசன் என்பவர் மூலம் பெற்றேன். அதன்படி அதே தினம் 11.45 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். பிரேதம் குளிர்பதன அறையில் வைக்கப்பட்டதால் விரைப்புடன் காணப்பட்டது. உடல் அழுகிய மாற்றங்களுடன் கை மற்றும் கால் விரல் நகங்கள் நீலம் பூத்துக் காணப்பட்டன. உடலில் இறப்பிற்கு முன்பு ஏற்பட்ட கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. நெற்றியில் மையக்கோட்டிற்கு சற்று வலது பக்கமாக 5 க்கு 5 செ.மீ அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது.



2. இடது பின்பக்க தலையில் 7 க்கு 3 செ.மீ அளவிலான குறுக்குவாட்டில் சாய்வான சிதைந்த காயம் காணப்பட்டது.

3. எலும்பு அளவு ஆழமுள்ள 5 க்கு 2 செ.மீ அளவுள்ள சிதைந்த காயம் இடது தலையில் மேல் பக்க பகுதியில் பின் பகுதியில்காணப்பட்டது. 4 க்கு 4 செ.மீ அளவிலான சிதைந்த காயம் வலது தலையின் முன் பக்க பகுதியிலும் 4 க்கு 1 க்கு 1 செ.மீ அளவுலான காயம் இடது தலையின் முன் பக்க பகுதியில் பின் பகுதியிலும், இடது தலையின் பின் பக்கத்தில் 6 க்கு 2 செ.மீ அளவுள்ள எலும்பு அளவு ஆழம் உள்ள சிராய்ப்புக் காயமும் காணப்பட்டது. இந்த காயங்களின் கீழ் மற்றும் சுற்றும் உள்ள தலை தோல் கந்திக் காணப்பட்டது.

4. வலது காலில் மேல் பகுதியில் 2 க்கு 1 க்கு 1 செ.மீ தசை அளவு ஆழம் உள்ள செங்குத்தான சிதைந்த காயம் காணப்பட்டது.

5. வலது காலின் மேல் பகுதியில் முன் பகுதியில் L வடிவ 3 க்கு 2 க்கு 0.5 செ.மீ அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது.

6. வலது முன் கையில் 25 க்கு 14 செ.மீ அளவிலும், இடது முன் கையில் 8 க்கு 7 செ.மீ அளவிலும் கன்றிக் காணப்பட்டது.

7. வலது கீழ் தாடையில் வளைவு பகுதியில் 3 வது கடவாய்பல் அளவில் முன் பகுதியில் உடைந்தும், அதைச் சுற்றி கன்றியும் காணப்பட்டது.

தலை முடிகள் பகுதியாக கரிந்தும், ஆண்குறி பக்கம் உள்ள முடிகள் 3 செ.மீ நீளத்தில் கருப்பாகவும், சிறிது எதிர்ப்புடன் வெளியே வரும் நிலையிலும் காணப்பட்டது.

மற்ற உடல் முடிகள் பகுதியாக கரிந்து காணப்பட்டன.

உடலில் இறப்பிற்கு பின் ஏற்பட்ட கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. கழுத்துப் பகுதி வலது பக்க மேல் நெஞ்சுப் பகுதி, இடது பக்க நெஞ்சுப் பகுதி மையக்கோட்டிற்கு அருகில் ஆகிய இடங்களில் இறப்பிற்கு பின் மிருகங்கள் கடித்த காயங்கள் காணப்பட்டன.

2. வலது கையில் விரல் நுனிப் பகுதி கரிந்தும், ஆழமான தீக் காயங்களுடனும் காணப்பட்டது. அதை அறுத்து ஆய்வு செய்த பொழுது இறப்பிற்கு முன் ஏற்பட்ட மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை. இரண்டு கால்களிலும் கீழ் பகுதியில் இறப்பிற்குப்பின் ஏற்பட்ட மேலோட்டமான தீக் காயங்கள் காணப்பட்டன.



<u>உள் காயங்கள் (இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள்)</u>

மண்டை ஓட்டின் வலது முன் பகுதி மையக் கோட்டின் அருகில் 9 செ.மீ அளவில் எலும்பு முறிவு காணப்பட்டது. அது மண்டை ஓட்டின் கீழ் பகுதியில் உள்ள வலது முன் குழிவு பகுதியில் 4 செ.மீ அளவில் எலும்பு முறிவாக நீண்டு இருந்தது. மூளையில் மேல் ஜவ்விற்கு கீழேயும், உள் ஜவ்விற்கு கீழேயும் பரவலான ரத்தக் கசிவு காணப்பட்டது. வலது பக்க நெஞ்சில் 3 மற்றும் 4 வது விலா எலும்புகள் குருத்து எலும்பு உடைந்து காணப்பட்டது. அதைச் சுற்றியுள்ள பகுதிகள் கன்றிக் காணப்பட்டது.

<u>இதர ஆய்வுகள்</u>

மார்பு மற்றும் வயிற்றறை கூடுகள் காலியாக இருந்தன. இதயம் அழுகுவதற்கான ஆரம்ப அறிகுறிகளுடன் காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக இருந்தது. இறைப்பையில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான வாசம் எதுவும் இல்லாத சுமார் 150 கிராம் அளவுள்ள பகுதியாக செறித்த அரிசி உணவு காணப்பட்டது. உட்புறச் சவ்வு ஆரம்ப அழுகல் அறிகுறிகளுடன் காணப்பட்டது. சிறுகுடலில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான வாசம் எதுவும் இல்லாத சுமார் 20 மில்லி அளவுள்ள பித்தம் கலந்த திரவம் காணப்பட்டது. உட்புற சவ்வு ஆரம்ப அழுகலுடன் காணப்பட்டது. நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல், மற்றும் சீறுநீரகங்கள் அழுகலின் ஆரம்பு அறிகுறியுடன் காணப்பட்டது. மூளை மிருதுவாகி வெட்டுத் தோற்றத்தில் ரத்தச்செறிவுடன் காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக இருந்தது. ரத்தம் மாதிரி, உடல் உள் உறுப்புகள் பரிசோதனைக்காக பாதுகாக்கப்பட்டு அனுப்பப்பட்டன. டி.என்.ஏ பரிசோதனைக்காக வலது தொடை எலும்பு பாதுகாக்கப்பட்டு அனுப்பப்பட்டது. மண்டை ஓடு மற்றும் பின் தாடை சூப்பர் இப்போஷிசன் பரிசோதனைக்காக பாதுகாத்து அனுப்பப்பட்டது. கருத்து நிறுத்தி வைக்கப்பட்டு நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.12 ஆகும். உடல் உள்ளுறுப்புகளின் ரசாயணபரிசோதனையில் உடலின் உள் உறுப்புகளில் நச்சு தன்மை காணப்படவில்லை என்று அறிக்கை வந்தது. இறுதி கருத்தாக இறந்து போன நபர் அவருக்கு ஏற்பட்ட தலைக்காயங்களினால்

இறந்திருக்கக் கூடும் என்று கருத்து வழங்கி நான் வழங்கிய இறுதி அறிக்கை அ.த.சா.ஆ.13 ஆகும். காண்பிக்கப்படும் மழுங்கிய கம்பியால் இறந்த நபருக்கு மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ( இவ்வழக்கில் தலைமறைவு எதிரி கொடுத்ததாகச் சொல்லும் ஒப்புதல்



வாக்கு மூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டுள்ள மழுங்கிய கம்பியை மருத்துவரிடம் காண்பித்து வினவப்பட்டது). இது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சடலக்கூராய்வுக்கு உட்படுத்தப்பட்ட பிரேதத்தின் வலது சுமார் **30** என சொல்லியுள்ளேன்**.**

மறு விசாரணை இல்லை

ஒம்/எட்வின்ஜோ.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா18 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | ஜெகநாதன் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 17th day of December 2019.

முதல் விசாரணை

நான் 2010 ஆம் வருடத்தில் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். 2009 ஆ் வருடத்தில் நான் சிங்காநல்லூர் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது சரண்யா, த/பெ.ராஜு என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான புகார் ஒன்றைக் கொடுத்தார். அந்த புகாரின் தன்மைக்கேற்ப நான் சிங்காநல்லூர் காவல் நிலைய கு.எண்.964/2009 ல் Man missing என நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 ற்கு அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். நான் தயாரித்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.14. (சாட்சிக்கு வயது 69. தற்பொழுது உடல்நலக் கோளாறு காரணமாக கை, கால்கள் மற்றும் பேச்சில் தடுமாற்றம் காணப்படுகிறது.) இது சம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்.

.. 2 ..

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.த.சா.ஆ.**14** என்னால் தயார் செய்யப்பட்டதாகும். அ.த.சா.ஆ.**14** ல் காணாமல் போன நபரின் வயது **58** எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஒம்/ஜெகநாதன்

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>(Chapter XXII Code of Criminal Procedure)</u>**

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 51/2012 | அரசு தரப்பு | அ.சா.19 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | சண்முகம் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of $17^{th}$ day of December 2019.

முதல் விசாரணை

நான் தற்பொழுது கோவை மாவட்டம், அன்னூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 8.11.2009 ஆம் தேதி அவினாசி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது 18 மணிக்கு திரு.ஏ.ஆர்.ரங்கசாமி, கிராம நிர்வாக அலுவலர், பழங்கரை கிராமம் (பொறுப்பு), அவினாசி வட்டம் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த ஒரு எழுத்து மூலமான புகாரினைப் பெற்றும், நிலையக் குற்ற எண்.1610/2009 சட்டப்பிரிவு 302, 201 இ.த.ச. பிரிவுகளின்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகாரினையும் இணைத்து அவினாசி நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், புலன் விசாரணைக்காக அவினாசி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு ஒரு நகலையும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கையின் நகலைப் பெற்றுக் கொண்டு புலன் விசாரணையை துவங்கினார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.15 ஆகும். காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.3 புகாரின் அடிப்படையில்தான் அ.த.சா.ஆ.15 முதல் தகவல் அறிக்கையை நான் பதிவு செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.



எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகார் அ.த.சா.ஆ.**3** ல் இறந்து போனவரின் வயது சுமார் **30** எனக் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.**15** லும் இறந்து போனவரின் வயது சுமார் **30** எனக் குறிப்பிட்டு இருக்கிறேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

ஒம்/சண்முகம்